# பெப்ரவரி – 09 – சனி

## ஆண்டவரின் திருமுகம்

**ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை. திபா. 23:1**

**முதல் வாசகம் ஏபிரேயர் 13 : 15 – 17, 20 – 21**

இயேசு வழியாக எப்போதும் நாம் கடவுளுக்குப் புகழ்ச்சிப்பலியைச் செலுத்துவோமாக, அவருடைய பெயரை அறிக்கையிடுவதன் வழியாக நம் உதடுகள் செலுத்தும் காணிக்கையே இப்புகழ்ச்சிப் பலியாகும். நன்மை செய்யவும் பகிர்ந்து வாழவும் மறவாதீர்கள். இவ்வகைப் பலிகளே கடவுளுக்கு உகந்தவை. உங்கள் தலைவர்களுக்குக் கீழ்ப்படியுங்கள் அவர்களுக்குப் பணிந்திருங்கள். அவர்கள் உங்களைப்பற்றிக் கணக்கு கொடுக்க வேண்டியிருப்பதால் உங்கள் நலனில் விழிப்பாயிருக்கிறார்கள். இப்பணி அவர்களுக்கு மகிழ்ச்சியுள்ளதாய் இருக்கும்படி நடந்து கொள்ளுங்கள். அவர்களுக்கு மனத்துயர் தராதீர்கள். அவர்களுடைய துயரம் உங்களுக்கு நலம் பயக்காது. எங்களுக்காக இறைவனிடம் வேண்டுங்கள். நாங்கள் நல்ல மனச்சான்று கொண்டுள்ளோம் என உறுதியாக நம்புகிறோம். அனைத்திலும் நன்னடத்தை உடையவர்களாய் இருக்கவே விரும்புகிறோம். உங்களிடம் நான் மீண்டும் விரைவில் வந்து சேரும்படி நீங்கள் இறைவனை வேண்ட உங்களை வருந்திக் கேட்டுக்கொள்கிறேன். என்றுமுள்ள உடன்படிக்கையின் இரத்தத்தால், ஆடுகளின் பெரும் ஆயரான நம் ஆண்டவர் இயேசுவை இறந்தோரிடமிருந்து எழுப்பியவர் அமைதியை அருளும் கடவுளே. அவர் தம் திருவுளத்தை நீங்கள் நிறைவேற்றும்படி, எல்லா நன்மையும் செய்வதற்கு உங்களை ஆயத்தப்படுத்தி இயேசு கிறிஸ்து வழியாகத் தமக்கு உகந்ததை நம்மில் செய்தருள்வாராக! இயேசு கிறிஸ்துவுக்கே என்றென்றும் மாட்சி உரித்தாகுக! ஆமென்.

**பதில்பாடல்:** ஆண்டவரே என் ஆயர் எனக்கேதும் குறையில்லை.

**நற்செய்தி : மாற்கு 6 : 30 -34**

அக்காலத்தில், திருத்தூதர்கள் இயேசுவிடம் வந்துகூடித் தாங்கள் செய்தவை, கற்பித்தவையெல்லாம் அவருக்குத் தெரிவித்தார்கள். அவர் அவர்களிடம், நீங்கள் பாலைநிலத்திலுள்ள தனிமையான ஓர் இடத்திற்குச் சென்று சற்று ஓய்வெடுங்கள்" என்றார். ஏனெனில் பலர் வருவதும் போவதுமாய் இருந்ததால், உண்பதற்குக்கூட அவர்களுக்கு நேரம் கிடைக்கவில்லை. அவ்வாறே அவர்கள் படகேறிப் பாலைநிலத்தில் உள்ள தனிமையான ஓர் இடத்திற்குச் சென்றார்கள். அவர்கள் புறப்பட்டுப் போவதை மக்கள் பார்த்தார்கள். பலர் அவர்களை இன்னாரென்று தெரிந்து கொண்டு, எல்லா நகர்களிலிருந்தும் கால்நடையாகவே கூட்டமாய் ஓடி, அவர்களுக்குமுன் அங்கு வந்து சேர்ந்தனர். அவர் கரையில் இறங்கியபோது பெருந்திரளான மக்களைக் கண்டார். அவர்கள் ஆயரில்லா ஆடுகளைப்போல் இருந்ததால் அவர்கள் மீது பரிவு கொண்டு, அவர்களுக்குப் பலவற்றைக் கற்பித்தார்.

**தியானம்:** பாவங்களிலிருந்து மீட்டெடுத்த இறைமகன் இயேசு நாங்கள் என்றும் மகிழ்ந்திருக்கும் படி எம்மேல் பரிவு கொண்டு எம்மை வழிநடத்துகின்றார். மனதின் விருப்பங்களை அறிகிற இறைவன் நாங்கள் கேட்பதற்கு முன்பாகவே யாவற்றையும் எமக்குத் தருவார். ஆனால் அதற்கு நாங்கள் நன்றிகூற மறந்துவிடுகினறோம். அன்று இயேசு பத்துத் தொழு நோயாளர்களைக குணப்படுத்துகிறார், ஆனால் அவரிடம் வந்து நன்றி கூறியது ஒருவர் மட்டுமே. எனவேதான் "மிகுதி ஒன்பது பேரும் குணமடைய வில்லையா என்று அவரிடம் கேட்டார்". அவர் எமக்குச் செய்யும் ஒவ்வொன்றிற்கும் சாட்சியம் பகிர வேண்டும், அவரை மகிமைப்படுத்த வேண்டும் அப்பொழுது எம்மீது மேலும் மேலும் அன்பைப் பொழிந்து எம்மை மகிழ்ச்சியுறச் செய்வார். "கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள், தட்டுங்கள் திறக்கப்படும் கேட்போர் எல்லோரும் பெற்றுக் கொள்வர்: என்று இறைமகன் இயேசு கூறியிருக்கின்றார். இன்றைய வாசகத்திலும் இயேசு படகிலிருந்து இறங்கி வருவதைக் கண்ட மக்கள் அவரைத் தேடி வந்தார்கள் காரணம் அவர் நோய்களைக் குணப்படுத்தவோ மற்றும் பல அறிவுரைகள் கூறவோ அவர் ஒருவரால்தான் முடியும் என்று விசுவசித்தார்கள். இன்று நாங்கள் எவ்வாறு வாழ்கின்றோம்.? இறைமகன் இயேசுவை விசுவசித்து ஏற்று வாழ்கின்றோமா? அவருக்கு நன்றி கூறுகின்றோமா? அவரில் மகிழ்ச்சி கொள்கின்றோமா? இவையாவற்றிற்கும் முக்கியமானதொன்றாக அன்புடன் கூடிய விசுவாச வாழ்வாகும். அவை வெளிப்பட வேண்டுமாயின் அயலவர்கள், நண்பர்கள், உறவினர்கள் என்று சகோதர அன்புடன் வாழும் பொழுது இறைவனை அன்பு செய்கின்றோம். நாங்கள் இறைவனை அன்பு செய்யும் பொழுது எமது தேவைகளையும் அவர் சந்திப்பார். அப்பொழுது எமது வாழ்வும் மகிழ்ச்சியுறும், எனவே நாங்கள் பெற்றுக் கொண்ட நன்மைகளை மற்றவர்களும் பெற்றுக்கொள்ள, அவரது அன்பை சுவைக்க நல்வழியில் நடக்க உதவி செய்வோம்.